THIRU K. S. KOTHANDARAMIAH : About eight sheep breeding centres are closed in Hosur taluk. Government have constructed a number of buildings. Since these centres are closed, the buildings are in a ruinous condition. Hosur has got a congenial climate and facilities for sheep breeding. Under the circumstances will the Hon. Minister think of reviving the closed sheep centres?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அப்படி ஒன்றும் இப்போது யோசனை இல்லை.

முட்டைப்பொடி தயாரிப்பு

*298 வினு—திரு. ஏ. எம். இராஜா : மாண்புமிகு உணவு, வணிக வரித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முட்டைப் பொடி (Egg Powder) செய்யும் தொழிற்சாலை ஏற்படுத்தும் திட்டம் ஏதேனும் தமிழக அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அது எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

கைத்தறி துணிக்கு விற்பனைக்கழிவு வீதத்தில் உயர்வு

*299 வினு— திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

தீபாவளி, பொங்கல் போன்ற விசேஷ நாட்களில் கதர்த் துணிக்கு தரப்படுகின்ற அளவுக்குக் கைத்தறி துணிக்கும் விற்பனை கழிவு (ரிபேட்) உயர்த்தும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, கதரைவிட கைத்தறியில் அதிகமான தொழிலாளர்கள் ஈடுபடுகிற காரணத்தினுல், அவர்கள் மீது கருணை காட்டி இவர்களுக்கும் அதிகமான ரிபேட் வழங்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கதருக்கென்று ஒரு வாரியம் தனியாக இருக்கிறது. மத்திய அரசாங்கம் அதற்கென்று தனித் திட்டம் வகுத்திருக்கிறுர்கள். கைத்தறிக்கு அது அனுமதிக்கப்படுவதில்லை.

திரு. சி. வீரமணி : தீபாவளி சமயத்தில், பொங்கல் சமயத்தில் கதர் கைத்தறிகளுக்கு ரிபேட் கொடுப்பதுபோல—கையினுல் செய்யப்படக்கூடிய மிதி அடிகளுக்கும், அவை இயந்திரத்தினுல் செய்

யப்படுகிற மிதியடிகளோடு போட்டியிட முடியாத காரணத்தினால் —கையால் செய்யப்படுகிற பொருள்களுக்கு ரிபேட் வழங்க முன் வருவார்களா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கைத்தறிகளுக்குத்தான் ரிபேட் கொடுத்துவருகிறோம்.

திரு. சி. கோவிந்தராஜன் : தீபாவளி, பொங்கல் சமயத்தில் கதர் துணிகள் பஞ்சாயத்து யூனியன் ஆசிரியர்கள், சிப்பந்திகளுக்குக் கடனாக வழங்கப்படுகிறது. அதுபோல கைத்தறித் துணிகள் வழங்குவார்களா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்த ஆண்டு கைத்தறித் துணிக்கும் அந்த வசதி கொடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. ஆர். கருப்பையா : கதர் வாரியம் இருப்பதுபோல் கைத்தறி வாரியம் ஒன்றை ஏற்படுத்த வேண்டுமென்று இந்த அரசு மத்திய அரசுக்குச் சிபார்சு செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அதற்குத் தனி வாரியம் தேவையில்லை. இப்போதே மாநில சங்கம் இருக்கிறது. ஹாண்ட் லூம்ஸ் டைரெக்டர் இருக்கிறார். இரண்டும் சேர்ந்து உதவி புரிகிறது.

திரு. எம். எஸ். மணி : மில்லில் நூற்கப்பட்ட நூலை தறியில் நெய்வது கைத்தறி. நூலையும் கையினாலேயே நூற்றுக்கொண்டு தறியில் நெய்வது கதர். அதைவிட இதற்கு அதிக கை உழைப்பு இருக்கிறதினால் இன்னும் அதிக உதவி அளிப்பார்களா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கனம் அங்கத்தினர் சுதருக்கு வாதாடுகிறார்கள்.

Clay Toys Unit at Perambur

*** 300 *Q*.—THIRU K. SAHADEVA KANDER** : Will the Hon. the Minister for Industries be pleased to state :

(*a*) whether the Government Glazed Clay Toys Unit is functioning at Perambur, Madras; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) இப்பிரிவு 1961 முதல் செயல்பட்டு வருகிறது. அழகு வேலைப்பாடமைந்த மண்பாண்டத் தயாரிப்புக் கலையில் நாட்டமுள்ள தெரிந்தெடுக்கப்பட்ட மாணவர்களுக்கு அது பயிற்சி அளிக்கிறது. ஆண்டுதோறும் 10 மாணவர்கள் இப்பயிற்சியில் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். ஒவ்வொரு மாணவருக்கும் திங்கள் ஒன்றுக்கு ரூ. 40 உதவிப் பணம் வழங்கப்படுகிறது. அழகு வேலைப்பாடமைந்த மட்பாண்டத் தொழிலிலும், அன்றாடப் பயனுக்கான மட்பாண்டத் தொழிலிலும் புதிய வடிவமைப்பு மாதிரிகளைத் தயாரிக்கும் பணியும் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகிறது.